https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

18th FEBRUARY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 67





## ரணிலின் வெற்றிக்கு விரிவான கூட்டமைப்பு:

# எல்லா கட்சிகளுக்கும் வலை வீச்சு

எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை எப்படியாவது வெல்ல வைக்க வேண்டும் என்ற நோக்கில் ரணில் தரப்பு பலதரப்பட்ட வியூகங்களை வகுத்து வருவதாக ரணில் தரப்பு வட்டாரத்தில் இருந்து அறிய முடிகிறது.

இதற்காக விரிவான கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அணைத்து கட்சிகளுக்கும் வலை விரிக்கப்பட்டுள்ளது என்றும் அத்தரப்பு மேலும் கூறுகிறது.

ரணில் விக்ரமசிங்க ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக அன்றி பொது வேட்பாளராகவே நிறுத்தப்படுவார் என்று ரணில் தரப்பு வட்டாரம் தெரிவிக்கிறது.

02

## எந்தத் தேர்தல் முதலில்?

03

## ஹரினுக்கு எதிராக வழக்கு



இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என்று சுற்றுலா துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ இந்தியாவில் வைத்து கூறியமைப்பு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு கூறியதன் மூலம் அரசமைப்பு-நாட்டின் இறைமை-அமைச்சுப் பதவியேற்கும்போது

02

## சந்திரிக்கா - மைத்திரி இணைவு இழுபறியில்!



முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா அம்மையார் மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஒன்றினையும் செயற்பாடு தொடர்ந்து இழுபறியில் உள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

தான் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கும் திட்டத்தில் மைத்திரி இருப்பதாலேயே இந்த இழுபறி நீடிக்கிறது என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

மைத்திரியை வேட்பாளராக இறக்குவதில் சந்திரிக்காவிடம்

02

## ஒத்திப்போட்டால் ஜனாதிபதியை விரட்டுவோம்

ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்தால் அதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்றும் அப்படிச் செய்தால் மக்களுடன் வீதிக்கு இறங்கி ஜனாதிபதியை விரட்டியடிப்போம் என்றும் ஜேவிபியின் பொது செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் நடுப்பகுதியில் இப்போதுள்ள ஜனாதிபதியின் பதவி காலம் முடிகிறது. அரசமைப்பின்படி,அதற்கு முன்னதாகவே ஜனாதிபதி தேர்தலை நடத்தி ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும். அந்தத் தேர்தலை ஒத்திப்போடுவதற்கோ அல்லது வேறு ஏதும் சதி செய்வதற்கோ இடம்கொடுக்கமாட்டோம்.மக்களை வீதிக்கு இறக்கி இந்த அரசை விரட்டுவோம் என்று மேலும் கூறினார்.



புதுசுடர்
www.puthusudar.lk
2024 FEBRUARY 18 - SUNDAY

# அனுரவால் அதிரும் அரசியல் அரங்கு

ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினர் இந்திய அரசின் உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று இந்தியா சென்று வந்ததுதான் இப்போது இலங்கை அரசியல் அரங்கின் பேசு பொருளாக மாறியுள்ளது.

ஜேவிபி அரசும் அல்ல்பிரதான எதிர்க்கட்சியும் அல்ல.வெறுமனே மூன்று ஆசனங்களை மாத்திரம் வைத்துள்ள கடைசி நிலை எதிர்க்கட்சி.

ஆனால், அப்படிப்பட்ட சிறிய எதிர்க்கட்சியை அழைத்து இந்திய அரசு பேசி இருப்பதுதான் எல்லா அரசியல்வாதிகளுக்கும் வயிற்றை கலக்கியுள்ளது.

அதுவும் எப்போதுமே இந்திய எதிர்ப்பு அரசியலை தனது கொள்கையாகக் கொண்டுள்ளது ஜேவிபி.அப்படிப்பட்ட ஒரு கட்சியை இந்திய அரசு ஏன் அழைத்துப் பேசியுள்ளது என்று குழம்பிப் போயுள்ளார்கள் ஜேவிபி எதிர்ப்பு அரசியல்வாதிகள்.

அடுத்து ஆட்சியைப் பிடிக்கப்போவது ஜேவிபிதான் என்ற ஊகம்தான் இந்திய அரசின் இந்த அழைப்புக்குக் காரணம் என்று சொல்லலாம்.

நாட்டில் இன்று ஜேவிபி அலைதான் அடிக்கிறது.இந்த அரசியல்வாதிகள்மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது,மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற பெரும் கட்சிகள் எல்லாம் ஒரேமாதிரிதான் இருக்கின்றன. ஊழல்,மோசடி,திருட்டு எல்லாம் எல்லா ஆட்சியிலும் சமமாகவே இடம்பெறுகின்றன..

மஹிந்தவின் அரசில் ஊழல் என்று கூறித்தான் மக்கள் 2015 இல் மைத்திரி-ரணில் அரசைக் கொண்டுவந்தனர்.அதிலும் ஊழல் இடம்பெற மீண்டும் மஹிந்தவின் பக்கம் திரும்பி கோத்தாவின் அரசைக் கொண்டு வந்தனர்.

கோத்தாவோ இரண்டு வருடங்களுக்குள் நினைத்துப் பார்க்க முடியாதவாறு-தாங்க முடியாதவாறு நாட்டை பொருளாதாரரீதியில் அதலபாதாளத்தில் தள்ளிவிட்டு பதவியை விட்டு ஓடிவிட்டார்.

இதனால் அவரும் மக்களை ஏமாற்றியுள்ளார்.மக்கள் அவர்மீது வைத்த நம்பிக்கைமீது மண் அள்ளிப் போட்டுள்ளார்.

இறுதியில் ரணில் விக்ரமசிங்க நாட்டை பொறுப்பேற்றார்.அப்போதும் முன்னேற்றமில்லை.கோத்தாவின் ஆட்சியில் இருந்ததை விடவும் மோசமான முறையில் வாழ்க்கை செலவீனம் உயர்ந்துள்ளது. பொருளாதாரம் வீழ்ந்துள்ளது.

கோத்தாவின் ஆட்சியில் இருந்த மின் வெட்டு மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மாத்திரம் ரணில் தீர்வைக் கண்டுள்ளார்.மற்றைய விடயங்கள் மக்களால் தாங்க முடியாத சுமையாக உள்ளது.

பொருட்களின் விலைகள் உயர்ந்துகொண்டே செல்கின்றன. மின்சார கட்டண அதிகரிப்பில் இலங்கை ஆசியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.மின் கட்டணத்தை செலுத்த முடியாமல் 50 லட்சம் மின் துண்டிப்புகள் இடம்பெற்றுள்ளன.

வட் வரிகள் போன்ற பல வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.லட்ச கணக்கில் தொழில்சாலைகள்,சிறிய வர்த்தகங்கள் எல்லாம் மூடப்பட்டுள்ளன.

மக்கள் தொழில் வாய்ப்பை இழந்து வெளிநாடுகளுக்கு தொழில் தேடிச் செல்கின்றனர்.அந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. வறுமை,வேலையின்மை அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

ரணிலின் ஆட்சியிலும் ஊழல்,மோசடிகள் இடம்பெறத்தான் செய்கின்றன.வைத்திய துறையில் இடம்பெற்றுள்ள ஊழல் இன்று பேசு பொருளாக மாறியுள்ளது. முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வல அதற்காகக் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆகவே,மாறி மாறி ஆட்சிக்கு வரும் கட்சிகள் இந்த ஊழலை சர்வ சாதாரணமாகவே செய்கின்றன.இதனால் ஊழலுக்கு எதிராகப் பேசுகின்ற-எளிமையான வாழ்க்கை வாழ்கின்ற ஜேவிபிமீதே மக்களின் கவனம் திரும்பியுள்ளது.

இந்த முறை அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்ப்போம். அவர்கள்தான் இதற்கு சரியானவர்கள் என்ற கருத்து மக்கள் மத்தியில் நிலவுகிறது.

யாரிடம் கேட்டாலும் ஜேவிபி..ஜேவிபி என்றே பேசுகின்றனர்.இது தொடர்பில் புலனாய்வு அறிக்கை ஒன்றும் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.ஜேவிபியின் மக்கள் செல்வாக்கு அதிகரித்துச் செல்வதுபற்றி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய புலனாய்வின் தேடுதலிலும் ஜேவிபியின் செல்வாக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே,அடுத்து ஆட்சியைப் பிடிக்கப்போவது ஜேவிபிதான் என்று இந்தியா முடிவு செய்ததன் காரணமாகவே ஜேவிபியை அழைத்துப் பேசியுள்ளது என்று கருதலாம்.

அதுபோக,இந்த விஜயத்தால் இலங்கைக்குள்ளும் ஜேவிபியின் செல்வாக்கு மேலும் அதிகரித்துள்ளது.ஜேவிபிதான் அடுத்த அரசு என்று மக்கள் நம்பத் தொடங்கியுள்ளனர்.

## ரணிலின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மொட்டு கட்சி தனித்து வேட்பாளர் ஒருவரைக் களமிறக்காகாது ரணிலையே இறக்கும் வகையில் மொட்டு கட்சிக்குள் இருந்து பிரசன்ன ரணதுங்க மற்றும் நிமால் லான்சா உள்ளிட்ட மொட்டு கட்சி உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்து வருவதை அவதானிக்க முடிகிறது.

அதேபோல், சுதந்திர கட்சியில் இருந்து அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றவர்களும் சு.க தனித்து வேட்பாளரை நிறுத்தாமல் ரணிலுக்கே ஆதரவு வழங்கும் வகையில் அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

மேலும்,ரணிலின் விசுவாசிகள் நாலா பக்கமும் ஓடி எல்லா கட்சிகளுக்கும் வலை வீசி வருகின்றனர்.




## சந்திரிக்கா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன என்று அறிய முடிகிறது.

அதேவேளை,அமைச்சர்களாக இருக்கின்ற சு.க உறுப்பினர்கள் எவரும் மைத்திரியை களமிறக்க விரும்பவில்லை என்றும் சு.க ரணிலுக்கே ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் உள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

## ஹரினுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட சத்திய பிரமாணம் எல்லாம் மீறப்பட்டுள்ளன்ன என்று கூறியுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொது செயலாளர் வைத்தியர் வசந்த பண்டார இந்தக் கூற்றுக்கு எதிராக விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று கூறினார்.



# எந்தத் தேர்தல் முதலில்?

கேள்வி : 13 எம்பிக்களைக் கொண்ட உங்களது சுதந்திர மக்கள் சபையின் தற்போதைய நிலை என்ன ?

கேள்வி : ஜேவிபியுடன் கூட்டுச் சேரும் திட்டம் ஏதும் உண்டா?

கேள்வி : நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே?

கேள்வி : ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடுவார் என்று ரணில் விக்ரமசிங்க இன்னும் நேரடியாக சொல்லவில்லையே?

கேள்வி : அனுர குமாரவின் இந்திய விஜயம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?



***இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும. அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.***

**கேள்வி: 13 எம்பிக்களைக் கொண்ட உங்களது சுதந்திர மக்கள் சபையின் தற்போதைய நிலை என்ன?**

பதில் : இது அரசியல் கட்சியல்ல.ஒரு குழு.இதில் 13 எம்பிக்கள் உள்ளனர். அவர்களுள் 6 பேர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டுச் சேர வேண்டும் என்று கூறியுள்ளனர்.

அரசியல் தொடர்பில் எங்களிடம் 2 நிலைப்பாடுகள் உள்ளன.மற்றப்படி வேறு எந்த பிரச்சினையும் எமக்கிடையில் இல்லை.ஒற்றுமையாகவே உள்ளோம்.

ஐக்கிய மக்கள் சக்தியையும் ஜேவிபியையும் ஒன்றிணைத்து பாரிய தளம் ஒன்றை உருவாக்கும் திட்டத்தில் நாம் இருந்தோம்.அது வெற்றியளிக்கவில்லை.

ரணில் விக்கரசிங்கவின் பொருளாதாரக் கொள்கை தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம்.

ரணில் எதைப்பற்றியும் கவலைப்படாமல் –மக்களை பற்றி சிந்திக்காமல் அவரது பொருளாதார திட்டத்தை அமுல்படுத்திக்கொண்டு செல்கிறார்.இதைத் தோற்கடிப்பதற்கு மாற்று வேலை திட்டம் ஒன்று தேவை.

**கேள்வி : ஜேவிபியுடன் கூட்டுச் சேரும் திட்டம் ஏதும் உண்டா?**

பதில் : அதை எதிர்காலமே தீர்மானிக்கும்.இப்போது அது தொடர்பில் எந்த முடிவும் எடுக்கவில்லை. ஆனால்,அரசின் திட்டத்தை தோற்கடிப்பதற்கு மாற்றுத் திட்டம் தேவை. அதற்காக எல்லோரையும் ஒன்றிணைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் உள்ளேன்.

அப்படியானதொரு திட்டம் உருவாக்கப்பட்டால் அரசில் உள்ள சிலரும் எம்முடன் இணைவதற்குத் தயாராகவுள்ளனர்.இங்கு கட்சியோ –நபர்களோ முக்கியமல்ல கொள்கைதான் முக்கியம்.

கடந்த காலங்களில் என்னதான் முரண்பாடுகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் கணக்கில் எடுக்காது ஒன்றிணைய வேண்டும்.

**கேள்வி : எந்தத் தேர்தல் முதலில் நடக்கும்? ஜனாதிபதி தேர்தலா? நாடாளுமன்றத் தேர்தலா ?**

பதில் :எந்தத் தேர்தலையும் நடத்துவதற்கு அரசுக்கு விருப்பமில்லை.இந்த அரசு தேர்தல் அச்சத்தில் உள்ளது.வரலாற்றில் முதல் தடவையாக இரண்டு தேர்தல்களை ஒத்திப்போட்டுள்ளது.

வரலாற்றில் நாடாளுமன்றத் தேர்தலை 6 வருடங்களுக்கு ஒத்திப்போட்டது இந்த ஐக்கிய தேசிய கட்சி.தேர்தல் நடத்தப்பட வேண்டுமா,இல்லையா என்று சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியது.

வாக்குச் சாவடிகளுக்குள் புகுந்து கள்ள வாக்குகளை போட்டு தங்களுக்குத் தேவையான முடிவை பெற்றுக்கொண்டது ஐக்கிய தேசிய கட்சி அரசு.அதனூடாக நாடாளுமன்றத் தேர்தலை 6 வருடங்களுக்கு ஒத்திப்போட்டது.

அப்படிப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் இப்போது ஜனாதிபதியாகி இரண்டு தேர்தல்களை ஒத்திப்போட்டுள்ளார்.

இதனால்,ரணில் விருப்பத்தோடு தேர்தலை நடத்துவார் என்று சொல்ல முடியாது.இருந்தாலும்,அவர் தேர்தலை நடத்தும்வரை நாம் காத்திருக்கத் தேவையில்லை.

ஜனாதிபதியின் பதவி காலம் முடிவதற்கு ஒரு மாதம் இருக்கும்போது தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசமைப்பு சொல்கிறது.

**கேள்வி : நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே?**

பதில் : அதைச் செய்வதாக இருந்தால் இரண்டு முக்கிய விடயங்கள் தேவை. ஒன்று நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை.அடுத்தது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.



**அரசுக்குத் தேர்தலை நடத்துவதற்கு விருப்பமில்லை.எப்படி தேர்தலை நிறுத்தலாம் என்று யோசிக்கிறது.அதனால்தான் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்கும் செயற்பாட்டை முன்னெடுத்து தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு முயற்சி செய்கிறது.**

தேர்தல் இந்த வருடம் ஒக்டொபரில் நடத்தப்பட வேண்டும்.இந்த இரண்டு விடயங்களையும் செய்வதற்கு காலம் போதாது.

முக்கிய பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காக அரசு இந்த மாதிரியான விடயங்களை வெறுமனே பேசு பொருளாக்குகிறது.

அரசுக்குத் தேர்தலை நடத்துவதற்கு விருப்பமில்லை.எப்படி தேர்தலை நிறுத்தலாம் என்று யோசிக்கிறது. அப்படியான திட்டங்களில் ஒன்றுதான் இதுவும்.

**கேள்வி : ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடுவார் என்று ரணில் விக்ரமசிங்க இன்னும் நேரடியாக சொல்லவில்லையே?**

பதில் : அவருக்கு ஆசையும் இருக்கு. பயமும் இருக்கு.

**கேள்வி : அனுரகுமாரவின் இந்திய விஜயம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : இந்த விஜயத்தை நான் காழ்ப்புணர்ச்சியுடன் பார்க்கவில்லை.நல்ல முறையில் –நல்ல மனதுடன் பார்க்கிறேன்.

**கேள்வி : பாடசாலை புத்தகங்களுக்கு வட் வரி அரவிடுவது தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : ஆசியாவிலேயே புத்தகங்களுக்கு வட் வரி அறவிடும் ஒரேயொரு நாடு இலங்கைதான்.அதிக பிரச்சினைகள் உள்ள ஆப்கானிஸ்தானில்கூட இந்த நிலை இல்லை.

புத்தகங்களுக்கு வரி அரவிட்டுவிடுவதானது அறிவுக்கு வரி அரவிடுதல் என்றே அர்த்தப்படும்.இப்படிச் செய்ய வேண்டாம் என்று எல்லோரும் கூறியபோதிலும் அரசு கேட்கவில்லை.

உண்மையில் இந்த நாடு ஏழை நாடு அல்ல.பணக்கார நாடு.எல்லா வளங்களும் உள்ள நாடு.எல்லாம் இருந்தும் மக்கள் ஏழையாக உள்ளார்கள்.அதற்கு காரணம் அரசியல்வாதிகளின் பிழையான பொருளாதார கொள்கைதான் – என்றார்.

# புனித ஹஜ்
# HAJJ 2024
## ஹஜ்ஜுக்கான புதிவுகள் ஆரம்பம்




36 வருட ஹஜ் உம்றா அனுபவத்துடன் இம்முறை புனித ஹஜ்ஜிற்காக அல்ஹாஜ் சையாப் அன்வர் அவர்களின் கண்காணிப்பில் ஹாஜிகளை அழைத்துச்செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது

**சப்ரா ட்ரவல்ஸ் & டுவர்ஸ்.**

**அஸீஸியா செல்வதில்லை மக்காவில் தங்குவது**

ஹஜ் பெகேஜில் அடங்குபவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- மினாவில் B Category Tent, தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விசா மற்றும் விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சிறப்பான சேவை.

**நீங்கள் எதிர்பாராத நியாய கட்டணம், நிறைவான சேவை**


எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

**அல்ஹாஜ் சையாப் அன்வர்**
**0775046995 I 0777667152**
**அல்ஹாஜ் ஜாபிர் - 0767007391**

## Safra Travels & Tours (Pvt) Ltd

FLG - 4, Dias Place, Gnasinghapura, Colombo -12.
Tel: (0094) 0112 335699 I Fax: 0112335043
E- mail: safra_travels@yahoo.com

---






47 ஆண்டுகால அனுபவமும், முத்த உலமாவும் ஹாஜிகளுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஹஜ் உம்றாவுக்கு வழிகாட்டும் அல்ஹாஜ் மவ்லவி ஏ.எல்.எம்.கலீல் மதனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் ஹஜ்பயணிக்கும் வாய்ப்பு

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

As Sheikh M A M Masooth Ahmed (Hashimi) JP
077 9000 115
(Kattankudy)

As Sheikh M A Ibrahim (Gafoori)
077 42 39 389
(Colombo)

Al Haj Mishab JP
077 400 8485
(Negombo)

நியாய கட்டணம், நிறைவான சேவை, நேர்த்தியான வழிகாட்டல்

மேலதிக விபரங்களுக்கு:

**+94 777 909 377 I +94 777 918 978**

## BURAQUE TRAVELS (PVT) LTD

+94 11 267 8811
Info@buraque.lk
62,Dematagoda Road, Colombo -09 Sri Lanka

In Service Over 3 Decades

IATA ACCREDITED AGENT

---

# ஹஜ்
# HAJJ 2024
## வாழ்நாளில் மறக்கமுடியாத பயணம்



**Our Services**

- Accommodation in Makkah ( 5 Star Hotel - Clock Tower)
  in Madinah ( 4 Star Hotel )
  in Mina Tent - B Category
- Sri Lankan Meals
- Luxury Ground Transport
- Visa with Insurance and Air Ticket
- Guidance By Ashsaik Suib Deeni

Luxury Package
Short Package



தரமான சேவையுடன் அஷ்ஷேக் சுஐப் தீனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் புனித ஹஜ்ஜை பூரண திருப்தியுடன் நிறைவேற்ற காலம் தாழ்த்தாமல் தொடர்புகொள்ளுங்கள்


For further details, contact:
**Alhaj Askar Aunn - 0777 03 15 23**
**Alhaj Aunn - 077 55 42 660**

## The Global Travels & Leisure Pvt Ltd

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்
No.653, Maradana (Next to Sampath Bank ) Colombo 10
Tel: 0117221876 I 0117221720 E-mail: askar@theglobal.lk

---

# புனித ஹஜ் 2024



இம்முறை புனித ஹஜ்ஜிற்காக ஹாஜிகளின் நலன் கருதி 3 பெகேஜ்களில் அழைத்துச் செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது.

**PAKAGE -A: 20,95,000/-**
முஅல்லிம் - B

**PAKAGE -B: 16,95,000/-**
முஅல்லிம் - C , Clock Tower

**SORT PAKAGE -B: 18,95,000/-**

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

**ரமழான் இறுதி 15 நாட்கள் உம்றா பெகேஜ்: 749,000/-**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:
அல்ஹாஜ் மௌலவி பைசல் பின்னூரி - 0777141151
அல்ஹாஜ் மௌலவி ஸகரியா இனாமி - 0777151156

# பின்னூரியா

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்

**BINNOORIYA HAJJ UMRAH SERVICE**

#204/01, Grandpass Road,Colombo-14. and Asna Super Market, Akurana.

# பாதுகாப்பற்ற சூழலில் சட்டவிரோத சிறுவர் பூங்கா ரூ.2.5 மில்லியனை பொறுப்பேற்க யாருமில்லை

இரத்தினபுரி சிறுவர் பூங்காவிற்கான நிலம் இன்று மக்கள் நடமாட்டத்திற்கு பாதுகாப்பற்ற இடமாகவும்,போதைவஸ்து பாவனையாளர்களின் வியாபார மத்திய தளமாகவும் காணப்படுவதாக இரத்தினபுரி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகாரத்திற்கு தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளும் இரத்தினபுரி அரச அதிகாரிகளும் பொறுப்புடன் செயற்பட்டிருந்தால் இப்படியான பெருந்தொகை மக்கள் பணம் என்றும் அநியாயமாக்கப்பட்டிருக்காது.

இரத்தினபுரி சிறுவர்களின் உரிமையுடனும் அவர்களின் பாதுகாப்புடன் விளையாட முயற்சித்துள்ள அனைத்து தரப்பினரையும் இப்போதாவது சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்",எனவும் மேற்படி மக்கள் அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இரத்தினபுரி மக்களின் பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்திருக்கும் இச்சிறுவர் பூங்கா தொடர்பில் சபரகமுவ மாகாண சபையிலும் கடந்த பல வருடங்களில் பல தடவைகள் ஆளும் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்களால் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளதுடன் முன்னைய ஆளுநர்களுடன் பேச்சுவார்த்தைகளும் இடம் பெற்றுள்ளதை சபரகமுவ மாகாண சபையின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் சபரகமுவ மாகாண சபையின் கோப் குழுவிலும் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையிலும் பல தடவைகள் பேசப்பட்டுள்ளதாக தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக கிடைக்கப் பெற்றுள்ள அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

சபரகமுவ மாகாண சபையுடன் இணைந்து இரத்தினபுரி மாநகர சபை 2.5 மில்லியன் ரூபாவை தவறாக பயன்படுத்தியமை தொடர்பில் சபரகமுவ மாகாண சபையின் செயலாளரிடம் கேட்டபோது:

இரத்தினபுரி சிறுவர் பூங்கா அமைப்பது தொடர்பில் இரத்தினபுரி மாநகர சபையின் மேயர் காலஞ்சென்ற கபில அபேரத்ன மேற்கொண்ட தீர்மானம் முற்றிலும் தவறானதாகும்.

அன்று அரச அதிகாரிகளும் இத்தவறுக்கு உடந்தையாக இருந்ததால்தான் 25 லட்சம் பணம் அநியாயமாக்கப்பட்டது.

இத்தவறுக்கு காரணமாக அமைந்த இரத்தினபுரி மேயர் மாத்திரமின்றி அன்று ஒப்புதல் வழங்கிய சபரகமுவ மாகாண ஆளுநரும் பொறுப்புக் கூற வேண்டும்.

அரச அபிவிருத்தி திட்டடங்களை முன்னெடுக்கின்ற போது அது தொடர்பான அறிவுத்தல்களை சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் அவதானம் செலுத்தியிருந்தால் இன்று இலங்கை பொருளாதார ரீதியில் வளம் குறைந்த நாடாக மாறியிருக்காது", என அவர் தெரிவிக்கார்.

2005 ஆம் ஆண்டு இரதினபுரி சிறுவர் பூங்கா திட்டத்தை ஆரம்பித்த அப்போதைய இரத்தினபுரி மாநகர சபை மேயர் சட்டத்தரணி கபில அபேரத்ன மரணமடைந்துள்ள நிலையில் அன்று மேற்படி மாநகர சபையின் பிரதி மேயராக பணியாற்றிய சீ.எஸ். நிலன்தவிடம் ஏன் பாதுகாப்பற்ற ஒரு திட்டத்தை ஆரம்பித்து மக்கள் பணத்தை அநியாயமாக செலவு செய்தீர்கள்?,மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரத்தை பெறாமல் இதனை ஏன் ஆரம்பித்தீர்கள்? எனக் கேட்டபோது:

"நான் இப்போது இரத்தினபுரி மாநகர சபையின் எந்தவொரு நிர்வாகப் பொறுப்பிலும் இல்லை.இதற்கு என்னால் இப்போது பதிலளிக்க முடியாது. எனினும் இரத்தினபுரி நகரில் சிறுவர் பூங்கா இல்லாத குறையை நிவர்த்தி செய்யவே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இதில் தவறுகள் இடம்பெற்றுள்ளன என்பதை நானும் ஏற்றுக்கொள்கின்றேன்", என அவர் தெரிவிக்கிறார்.

இரத்தனபுரி சிறுவர் பூங்காஅபிவிருத்தி திட்டம் தொடர்பான அறிக்கைகள் தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக எமக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கும் இரத்தினபுரி மாநகர சபையின் செயற்திட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.டீ.வணசுந்தர இது தொடர்பான மேலதிக தகவல்களை வழங்குவதை தவிர்த்துக் கொள்கிறார்.

இரத்தினபுரி சிறுவர் பாதுகாப்பு மற்றும் தகவல் மத்திய நிலை பணிப்பாளர் சட்டத்தரணி திருமதி சுஜாதா விக்ரமரத்ன இது தொடர்பாக எவ்வாறான மாற்று நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என விளக்கமளிக்கையில்

"இலங்கையில் மக்கள் வரிப்பணம் அரசியல் வாதிகளின் தவறான தீர்மானங்களுக்கு அரச அதிகாரிகள் தவறான வியாக்கியானம் வழங்கி அவற்றை சரிப்படுத்த முயற்சிப்பதாலேயே பெரும்பாலும் அநியாயமாக்கப்படுகிறது.

அரச நிதியை துஷ்பிரயோகம் செய்த அனைத்து அதிகாரிகளையும் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிப்பதன் மூலமே எதிர்காலத்தில் இவ்வாறான மோசடிகள் இடம்பெறுவதை கட்டுப்படுத்த முடியும்", என அவர் விளக்கம் அளிக்கிறார்.

(முற்றும்)






# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிவைத்தார் எம்.எஸ் தௌபீக்!






(எஸ். சினீஸ் கான்)

குறிஞ்சாக்கேணி மாகாத் நகர் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்கு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்யின் கோரிக்கைக்கமைவாக கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமானுடைய பரித்துரையின்கீழ் LIOC நிறுனத்தின் அனுசரனையில் நிவாரண உதவிகள் தௌபீக் எம்.பி யினால் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் LIOC நினுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் தீபக் தாஸ், முன்னாள் கிண்ணியா பிரதேச சபைத் தவிசாளர்களான ஜவாதுல்லா, சனூஸ் மற்றும் LIOC நிறுவனத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# உகண்டாவுக்கு கருவாடு கொண்டு சென்ற எம்.பி



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான குழுவொன்று மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக உகண்டா சென்றது.

அந்தக் குழுவில் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எம்பி கிங்ஸ் நெல்சனும் அடக்கம்.

ஒரு நாள் அவர் தங்கி இருந்த அறைக்கு அருகில் அங்கு சென்ற குழுவினர் கூடி நின்றனர். அது என்னவென்று எட்டிப் பார்த்தால் நெல்சன் எம்பி அந்த குழுவுக்கு உண்பதற்கு கருவாடு பகிர்ந்து கொண்டு நின்றாராம்.

ஆம்,,, உண்பதற்காக அவர் இலங்கையில் இருந்து கருவாடு கொண்டு போயிருக்கிறார்.

# தமிழ் கூட்டமைப்பின் தலைவராம் அவர்



சில நாட்களுக்கு முன் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நாடாளுமன்றத்துக்குச் சென்றார் ஜனாதிபதி.

கூட்டம் முடிந்ததும் அவரது அறையை நோக்கி விரைந்தார். அப்போது ஜனாதிபதியின் அறைக்கு அருகில் ஜனாதிபதியை எதிர்பார்த்துக்கொண்டு நின்றார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்பி சார்ள்ஸ் நிர்மலநாதன்.

சார்ள்ஸை கண்டதும் ஜனாதிபதி “M..TNA வின் தலைவர் வந்து இருக்கார் என ...” என்றார்.

“TNA வின் தலைவரா“? என்று கேட்டார்கள் ஜனாதிபதியுடன் வந்தவர்கள்.

“ஓம்..சிறிதரண்ட வெற்றிக்கு ரொம்ப பாடுபட்டவர் இவர்தானே ..” என்று பதிலளித்தார் ஜனாதிபதி.

அப்படியே நிர்மலநாதனை அறைக்குள் அழைத்துச் சென்று உரையாயாடினார்.வடக்கின் அபிவிருத்திக்கு டயஸ்போராவை உதவச் சொல்லுங்கள் என்றார் ஜனாதிபதி நிர்மலநாதனிடம்.

## துப்பறிவாளன்

# சம்பிரதாயத்தை மீறிய சுமந்திரன்



நிகழ்நிலை காப்புச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட அன்று சபையில் விவாதம் சூடு பறந்தது. அரசும் எதிர்க்கட்சிகளும் முட்டி மோதின. சட்ட மூலம் நிறைவேற்றப்படுவதைத் தடுப்பதற்காக எதிர்க்கட்சிகள் பலமுயற்சிகளை மேற்கொண்டன.

அதில் ஒன்றுதான் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி எம்.சுமந்திரன் செய்தது.

அவர் நாடாளுமன்ற உதவி செயலாளரை அழைத்துக்கொண்டு நாடாளுமன்றில் உள்ள அரசாங்கத்தின் அறைக்குள் நுழைந்தார்.

எதிர்க்கட்சி எம்பிக்கள் இப்படி நுழைவது சம்பிரதாயம் அல்ல.

அந்த அறையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் இருந்தனர். அவர்களுடன் இச்சட்ட மூலம் தொடர்பில் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் சுமந்திரன்.

தாம் இது தொடர்பில் திருத்தங்களை சபையில் சமர்ப்பித்துள்ளோம் என்று அவர்கள் கூறினர்.

அதை ஏற்க மறுத்த சுமந்திரன் தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

# உருவாக்கியவர் உயிருடன் இல்லை



மொட்டு கட்சி “தசபல சேனா“ என்றொருபிரிவை உருவாக்கியுள்ளது. அதன் நோக்கம் மொட்டு கட்சிக்கு எதிராக –அதன் உறுப்பினர்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் வழங்குவதாகும்.

இதில் விசேஷம் என்னவென்றால் இந்தப் பிரிவுக்கு ““ தசபல சேனா ““ என்று பெயர் வைத்தவர் அக்கட்சியின் உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான காலஞ்சென்ற சனத் நிஸாந்தவாகும்.

இந்தப் பிரிவை அங்குரார்ப்பணம் செய்யும்போது அவர் உயிருடன் இல்லை என்பதுதான் கவலையான விடயம்.



# வேட்பாளர் யார்?

சில நாட்களுக்கு முன் பொலன்னறுவையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்றார் மஹிந்த ராஜபக்ச.

இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத்தால் நிர்மாணிக்கப்பட்ட விஹாரை கட்டடம் ஒன்றின் திறப்பு விழா அது.

அங்கு சென்ற மஹிந்த, சிறிபால கம்லத்துக்கு சொந்தமான ஹோட்டல் ஒன்றில் தங்கி நின்றார்.

மொட்டு கட்சியின் பொலன்னறுவை மாவட்ட பிரமுகர்கள் அங்கு மஹிந்தவை சூழ்ந்துகொண்டு மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று வினவினர்.

உரிய நேரத்தில் அறிவிப்போம்.இப்போது அவசரப்படத் தேவையில்லை.பொருளாதாரத்தை முன்னேற்றக்கூடிய பொது வேட்பாளர் ஒருவரை களத்தில் நிறுத்துவோம் என்றார் மஹிந்த.

# ரகசிய சந்திப்பு

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் ஜேவிபி உறுப்பினர்கள் சிலருக்கும் இடையில் ரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றது.அவர்கள் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள்.

பிரசன்ன மேல் மாகாண முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில் பிரசன்னவுடன் நெருக்கமாக இருந்தவர்கள் அவர்கள்.



“உங்க தலைவர் அனுர ஜனாதிபதியாகின மாதிரிதான் ஆடுறாரு.அவர ரொம்ப ஆட வேண்டாம் என்று சொல்லுங்க” என்றார் பிரசன்ன அந்த ஜேவிபி உறுப்பினர்களிடம்.

“சொல்லி வேல இல்ல சேர். அவர் சிலரோடு சேர்ந்துகொண்டு வேற பிளான் ஒண்டு போடுறார். அமெரிக்காவை எதிர்த்துக்கொண்டு அமெரிக்காவின் வழியில்தான் போறாரு.கூட்டங்களுக்கு நிறைய சனம் வந்தா நாங்க வெற்றி பெறுவோம் என்றா அர்த்தம்?” என்று கூறி அனுரவைப்பற்றி பிரசன்னவிடம் போட்டுக் கொடுத்தார்கள் அவர்கள்.

# பசில் சொன்ன ரகசியம்



மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவையே நிறுத்த வேண்டும் என்று உறுதியாக நிற்பவர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க.

ஆனால்,மொட்டின் வேட்பாளர் தமிக்க பெரேராதான் என்று நீண்ட நாட்களாக கதை அடிபடுகிறது.

இது தொடர்பில் பசில் ராஜபக்சவிடம் கேட்டாராம் பிரசன்ன.பசில் அதை அடியோடு மறுத்துவிட்டாராம்.

அதுமட்டுமல்ல ,தமிக்க வேட்பாளர் இல்லை என்ற தகவலை எவரிடம் வேண்டுமானாலும் சொல்லுங்கள் என்றும் பசில் கூறினாராம்.

சில நாட்களுக்கு முன் பிரசன்ன தனது ஆதரவாளர்களை சந்தித்தபோது இந்தத் தகவலை அவர்களிடம் எத்திவைத்தார்.

# கொழும்பில் தெற்காசிய அலுவலகத்தை ஆரம்பித்த Greenpeace

Greenpeace தனது கொழும்பில் உள்ள தெற்காசிய பிராந்திய அலுவலகத்தை, Rainbow றுயசசழைச எனும் பிரபல கப்பலின் வருகையுடன் ஆரம்பித்துள்ளது.

இது எதிர்வரும் 6 நாட்களுக்கு மிகவும் எதிர்பார்க்கப்படும் 'People For Climate - Greenpeace Indian Ocean Ship Tour 2024' (காலநிலைக்காக மக்கள் - Greenpeace இந்து சமுத்திர கப்பல் பயணம் 2024) எனும் பயணத்தின் ஆரம்பத்தைக் குறிக்கிறது.

2024 பெப்ரவரி 13ஆம் திகதி சுயடைழெற றுயசசழைச கப்பலில் இடம்பெற்ற இதன் ஆரம்ப விழாவானது, தெற்காசிய பிராந்தியத்தில் கூட்டு முயற்சியை வலியுறுத்தல், பொறுப்புக்கூறல், மீளெழுச்சி ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு எடுத்துக்காட்டான பயணத்திற்கு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கப்பலின் வரவேற்பு விழாவானது, ஒன்றிணைவு மற்றும் ஒத்துழைப்பின் உற்சாகமான கொண்டாட்டமாக அமைந்திருந்தது.

இலங்கையின் அழகிய பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வசீகரிக்கும் கலாசார நிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெற்றன.

இந்த விழாவில் முக்கிய விருந்தினர்கள், அதிகாரிகள், பிரபலங்கள், செல்வாக்குமிக்கவர்கள், சபை உறுப்பினர்கள் மற்றும் காலநிலை மாற்றத்தை சமாளிக்கும் பணிக்காக Greenpeace உடன் இணைந்துள்ள கூட்டாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# Ask QX அறிமுகம்



முன்னோடியான செயற்கை பொது நுண்ணறிவு (AGI) நிறுவனமான QX Lab AI, இன்று மக்களுக்கு AI ஐ அணுகக்கூடியதாக மாற்றுவதற்கான உலகின் முதல் ஹைபிரிட் ஜெனரேட்டிவ் AI தளமான Ask QX ஐ அறிமுகப்படுத்தியது. Nod அடிப்படையிலான கட்டமைப்பைக் கொண்ட இந்த முதல் யுளை ஒஓ ஆனது 100 க்கும் அதிகமான மொழிகளில் கிடைக்கிறது.

ஆங்கிலம் தவிர, Ask QX ஆனது, மற்ற உலகளாவிய மொழிகளின் ஒரு தொகுப்பின் மத்தியில் அரபு, பிரஞ்சு, ஸ்பானிஷ், ஜப்பானிய, ஜெர்மன், இத்தாலிய, கொரியன், போர்த்துகீசியம், ரஷ்யன் மற்றும் சிங்களம் போன்ற பல உலகளாவிய மொழிகளிலும் கிடைக்கிறது.

இது QX Lab AI இன் எதிர்கால பார்வை மற்றும் இந்தியா மற்றும் மத்திய கிழக்கு மற்றும் இலங்கை போன்ற அண்டை சந்தைகளில் வளமான மொழியியல் செழுமை பற்றிய ஆழமான புரிதலுக்கு ஒரு சான்றாக இருக்கிறது.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்குள் உரை மற்றும் ஆடியோ வடிவங்கள் உடனுக்குடன் கிடைக்கும் மற்றும் படம் மற்றும் வீடியோவின் வரவிருக்கும் செயல்பாடுகளுடன், QX Lab AI தெற்காசியாவிற்கு ஒரு செயல்பாட்டு GenAI தளத்தை கொண்டு வருவதில் முன்னோடியாக உள்ளது.

Ask QX ஏற்கனவே இயங்குதளம் தொடங்கும் நேரத்தில் 8 மில்லியனுக்கும் அதிகமான பாவனையாளர்களின் பயனர் தளத்தைக் குவித்துள்ளது.

# INSEE இன் ஆக்கபூர்வ முயற்சி

சுற்றாடல் அமைச்சு, ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனம் (UNIDO), இலங்கை மின்சார சபை மற்றும் INSEE Ecocycle ஆகியவற்றிற்கு இடையிலான ஒரு முன்னோடி பங்குடமையின் கீழ், நாடெங்கிலுமுள்ள காலாவதியான இலங்கை மின்சார சபை மின்மாற்றிகள் மற்றும் ஒட்டுவேலைத் தொழிற்சாலைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 191 தொன் எடைகொண்ட Polychlorinated Biphenyls (PCBs) மாசுபட்ட மின்மாற்றி எண்ணெய் மற்றும் மின்மாற்றிகளை பொறுப்புமிக்க வழிமுறையின் கீழ் பாதுகாப்பாக அப்புறப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட நிலைமை இலங்கையில் சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக ஆபத்துக்களைத் தோற்றுவிக்கும் அபாயத்தைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1930 முதல் 1980 க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் வணிகரீதியாக உலகளவில் பாரிய அளவில் உற்பத்தி செய்யப்பட்ட PCBs, மின்சார மின்மாற்றிகள் மற்றும் மின்தேக்கிகள் அடங்கலாக பல்வேறுபட்ட கைத்தொழில் பயன்பாடுகளில் உபயோகிக்கப்பட்டு வந்துள்ளன.

இருந்த போதிலும் சுற்றுச்சூழல் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கு PCBs ஆல் ஏற்படும் அபாயமான விளைவுகள் மிகவும் பாரதூரமானவை. அவை வகுப்பு 1 காசினோசனிக்கு புற்றுநோய் (carcinogenic) காரணியாக உள்ளதுடன், சிறுவர்கள் மத்தியில் கோளாறுகளை விளைவிப்பதிலும் தொடர்புபட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டளவில் உபகரணங்களில் PCBs இன் பாவனையை ஒழிக்கும் உலகளாவிய பிரச்சாரத்தில் இலங்கையும் அங்கம் வகிப்பதுடன், ஒரு தேசம் என்ற வகையில் இது எமக்கு மிகவும் முக்கியமான ஒரு சாதனை இலக்காகும்.



# Prime Villas, Dalugama தொகுதி உரிமையாளர்களிடம் கையளிப்பு





இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளரான Prime Group, அதன் புதிய நிர்மாணத் தொகுதியான Prime Villas, Dalugama வின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்து அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வை அண்மையில் கோலாகலமாக கொண்டாடியிருந்தது.

இந்நிகழ்வு 2024 பெப்ரவரி 3 ஆம் திகதி நடைபெற்றதுடன், Prime Group இனால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களில் புதிய உள்ளடக்கமாகவும் அமைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட Prime Villas, Dalugama, பழைய கண்டி வீதியின் அருகில் அமைந்திருப்பதுடன், மூன்று வகையான 3-படுக்கைஅறை வசதிகளைக் கொண்ட விலாக்களை கொண்டுள்ளது. வசிப்போருக்கு சௌகரியம் மற்றும் நவீன அம்சங்களை வழங்குவதை நோக்காகக் கொண்டு இந்த வதிவிடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த விலாக்களின் புதிய உரிமையாளர்கள் தமது கருத்துக்களை பகிர்ந்து கொள்கையில், விலா இல. 11 ஐச் சேர்ந்த செஹானி சமரசிங்க குறிப்பிடுகையில், "நிர்மாணப் பகுதியில் Prime உடன் ஒப்பற்ற அனுபவத்தை நான் அனுபவித்திருந்தேன். இன்று பூர்த்தி செய்யப்பட்ட எனது இல்லத்தைக் காண்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் என்றார்.



# 50ஆவது ஆண்டு நிறைவு

பொது நல்வாழ்வைப் பாதுகாப்பதிலும் உயிர்களைக் காப்பதிலும் சுகாதாரத் துறையின் முக்கியப் பங்கை வகிக்கும், Hayleys குழுமத்தின் உறுப்பினரும், அதிக மதிப்புள்ள தேங்காய் சிரட்டை கார்பனின் முன்னணி உற்பத்தியாளருமான Haycarb, இரண்டு முன்னணி தேசிய மருத்துவமனைகளில் அத்தியாவசியமான சீரமைப்புப் பணிகளை வெற்றிகரமாக முடித்துள்ளது.

இலங்கையின் தேசிய வைத்தியசாலையில் (NHSL) பிளாஸ்டிக் சத்திரசிகிச்சைப் பிரிவையும் காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவையும் புனரமைப்பதற்காக 13 மில்லியன் ரூபாவை ஏற்றுமதியாளர்கள் முதலீடு செய்தனர்.

அண்மைக்கால சீரமைப்புகள் 20 வருட நன்கொடை செயற்பாடுகளில் அதன் காப்புரிமை பெற்ற Activated Carbon (RMPP1001) 380,000 போத்தல்கள் விஷம் உட்கொண்டால் அல்லது போதைப்பொருள் தொடர்பான அளவுக்கதிகமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க, நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

"கடந்த ஆண்டுகளில், நோயாளிகளுக்கு எங்கள் விலைமதிப்பற்ற Activated CarbonI வழங்குவதன் மூலம் பொது சுகாதாரத் துறைக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கினோம். எமது 50வது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்கள் அனைத்தும் மதிப்பை உயர்த்துவதற்கும் வாழ்க்கையை மாற்றுவதற்கும் ஒன்று சேர்வதே பிரதான நோக்கமாகும் என Haycarb முகாமைத்துவ பணிப்பாளர் ரஜித்த காரியவசன் தெரிவித்தார்.

# Wedding Show 2024இன் உத்தியோகபூர்வ வங்கிப் பங்குதாரராக செலான் வங்கி




Wedding Show 2024இன் உத்தியோகபூர்வ வங்கிப் பங்குதாரராக செலான் வங்கி இணைகின்றது. இந்நிகழ்வு, மணப்பெண் ஒப்பனை கலைஞர்கள், உல்லாச விடுதிகள், புகைப்படக் கலைஞர்கள், நிகழ்வு முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் திருமணம் தொடர்பான பல தரப்பட்ட சேவைகளை வழங்கும் 250இற்கும் மேற்பட்ட காட்சிகூடங்களை கொண்டுள்ளது.

சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் பெப்ரவரி 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இன்று 18ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

இந்நிகழ்வானது, தமது வாழ்வின் மறக்கமுடியாத நன்னாளுக்கு தயாராகும் தம்பதிகள் மற்றும் குடும்பங்களுக்கு அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை அங்கு வழங்கி வருகிறது.

# சிறப்பான வருடத்தை நிறைவு செய்த Alumex PLC




Aluminium Extrusion உற்பத்தித் துறையில் முன்னணி நிறுவனமான Alumex PLC, 2023 ஆம் ஆண்டை சிறந்த வெற்றிகளுடன் நிறைவு செய்துள்ளது.

கடந்த வருடத்தில் 14 இற்கும் மேற்பட்ட விருதுகளை வென்றுள்ளதன் மூலம், இலங்கையின் ஏற்றுமதி துறையை சிறப்பான பாதையை நோக்கிக் கொண்டு செல்வதில் தலைமைத்துவத்தையும் ஆளுமை, நிலைபேறான தன்மை மற்றும் வணிகத்தில் சிறந்து விளங்குவதற்கான அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியுள்ளது.

Alumex நிறுவனம், 25ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் 2023 விழாவில், "Overall Emerging Exporter of the Year 2021/2022" (ஒட்டுமொத்த வளர்ந்து வரும் ஏற்றுமதியாளர்) எனும் அனைவராலும் விரும்பத்தக்க பட்டத்தையும், இலகு பொறியியல் துறையில் மெரிட் விருதையும், 31ஆவது NCE ஏற்றுமதியாளர் விருதுகளில் இயந்திரவியல் மற்றும் இலகு பொறியியல் துறையின் கீழ் வெள்ளி விருதையும் வென்றது.

இது தொடர்பில், Alumex PLC இன் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரமுக் தெதிவல தெரிவிக்கையில், "அலுமினியம் உற்பத்தித் துறையில் நாம் தொடர்ச்சியாக முன்னோடியாக இருந்து வருகிறோம். சிறந்து விளங்குதல் மற்றும் புத்தாக்கத்தில் முன்னெப்போதும் இல்லாத தரங்களை அமைத்து வருகிறோம்.

அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் நிலைபேறான நடைமுறைகளை தழுவுவதற்கான எமது செயலூக்கமான அணுகுமுறைகள் ஆகியன, உலகளாவிய சந்தைகளில் முதலாவது பாதையை அமைப்பவர்களாக எம்மை நிலைநிறுத்தியுள்ளது. இது எமது நாட்டிற்கு ஏற்றுமதி வருமானத்தை ஈட்டுவதற்கான வாய்ப்புகளைத் தேட உதவுகிறது." என்றார்.

# புரத தினம் - 2024: 'Right To Protein'




தனது 5ஆவது ஆண்டில் காலடி வைத்துள்ள ProteinDay, போசணை பாதுகாப்பில் புரதத்தின் முக்கிய பங்கு பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும், பொதுமக்களுக்கான சுகாதார தீர்வுகளாக புரதம் நிறைந்த உணவுகளை அணுகுவதை மேம்படுத்தவும் தனிநபர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.

U.S. Soybean Export Council (USSEC) மூலம் செயற்படுத்தப்படும் "சுபைாவ வுழுீசழவநனை" திட்டமானது, அதன் ஐந்தாவது ஆண்டைக் கொண்டாடும் வகையில், 'Solve With Protein' (புரதம் மூலம் தீர்வு) எனும் தலைப்பை, 2024 பெப்ரவரி 27ஆம் திகதி கொண்டாடப்படும் புரத தினத்திற்கான கருப்பொருளாக அறிவித்துள்ளது.

இந்தியா மற்றும் தெற்காசியா முழுவதும் உள்ள பொதுமக்கள், புரத உணவுகளை அணுகக்கூடிய வகையில் வழங்குதல், புரதம் நிறைந்த உணவுகளுக்கான அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய, தனிநபர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களை ஒன்றிணைக்க, இந்த பிரசாரம் அழைப்பு விடுக்கிறது.

புரதமானது, ஒரு அத்தியாவசிய பெரும் போசணை உணவு எனும் புரிதல் இல்லாமை காரணமாக, போதியளவான புரதத்தை மக்கள் எடுத்துக் கொள்வதில்லை என்பதைக் காணக் கூடியதாக உள்ளது.



# இலங்கையில் முதற்தடவையாக நடைபெறவுள்ள லெஜண்ட்ஸ் கிரிக்கட் வெற்றிக்கிண்ண தொடர்

கிரிக்கட்டில் சிகரம் தொட்டு லெஜன்ட்களாக வர்ணிக்கப்படும் பல நாடுகளைச் சேர்ந்த வீரர்களை முதற்தடவையாக இலங்கையில் ஒன்றாக களம் காணச் செய்யும் லெஜன்ட்ஸ் வெற்றிக்கிண்ண சுற்றுத்தொடர் மார்ச் எட்டாம் திகதி கண்டியில் உள்ள பள்ளேகல மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இந்த சுற்றுத்தொடருக்குரிய போட்டிகள் தொடர்ந்து 14 நாட்கள் நடைபெறும். இந்த சுற்றுத்தொடர் கடந்த ஆண்டு டெல்லியில் அறிமுகம் செய்யப்பட்டு சிறப்பாக நடந்து முடிந்தது. இம்முறை வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொள்வதற்காக, நட்சத்திரங்களாகத் திகழ்ந்து ஓய்வு பெற்ற கிரிக்கட் வீரர்கள் ஏழு அணிகளாக களமிறங்குகிறார்கள்.

இந்த சுற்றுத்தொடர் டுஊஉவு வு20 டுநயபரநீஎவ டுைஅவைநன நிறுவனத்தால் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் பாகிஸ்தான், இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நட்சத்திர வீரர்கள் ஏழு அணிகளில் இடம்பெறுவார்கள்.

இந்தத் தகவல்கள் வீரர்களை அணிகளாக பிரித்து, வெற்றிக்கிண்ண சுற்றுத்தொடரின் ஜெர்சியை வெளியிடும் வைபவத்தில் வெளியிடப்பட்டன. கொழும்பு ஹில்ட்டன் ஹோட்டலில் வைபவம் நடைபெற்றது.

முன்னாள் கிரிக்கட் வீரர் பர்வீஸ் மஹ்ரூப் அணிகளுக்கு வீரர்களை பிரித்தொதுக்கும் நடைமுறையை வழிநடத்தினார்.

இதில் சமிந்த வாஸ், திஸர பெரேரா ஆகியோரும் இணைந்திருந்தார்கள். ஏழு அணிகளாக பிரித்து ஒதுக்கப்பட்ட வீரர்களில் யுவராஜ் சிங், கிரிஸ் கெயில், சுரேஷ் ரெய்னா, பென் டங்க், ரொஸ் ரெயிலர், ஜொஹான் போத்தா, ஹர்பஜன் சிங், ஷஹீட் அப்ரிடி, கம்ரான் அக்மல், சனத் ஜயசூரிய, மிஸ்பா உல்-ஹக், அம்பாட்டி ராயுடு, ட்வெயின் ப்ராவோ, திஸர பெரேரா, இம்ரான் தாஹிர் ஆகியோரும் அடங்குகிறார்கள்.

இந்த வீரர்கள் ராஜஸ்தான் கிங்ஸ், டெல்லி டெயார் டெவில்ஸ், பஞ்சாப் ரோயல், கெண்டி வோரியர்ஸ், கொலம்போ லயன்ஸ், நிவ்யோர்க் சுப்பர் ஸ்டார் ஸ்ட்ரைக்கர்ஸ், டுபாய் ஜயன்ட்ஸ் ஆகிய அணிகளில் விளையாடுவார்கள்.




# ஸ்ரீ லங்கா இன்ஸ்ரன்ஸ் - மேர்கன்டைல் கிரிக்கட் பங்காண்மை

ஸ்ரீ லங்கா இன்/வரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் (SLICGL) மற்றும் மேர்கன்டைல் கிரிக்கட் அசோசியேஷன் (MCA) ஆகியன புதிய ஆரம்பமாக, மூலோபாய பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளன.

MCA அங்கத்தவர்களுக்கு விசேடமான இணைந்த அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இந்தப் பங்காண்மை தொடர்பில் அறிவிக்கும் ஊடகவிலயாளர் சந்திப்பு அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் மேர்கன்டைல் கிரிக்கட் அசோசியேஷன் தலைவர் மஹேஷ் டி அல்விஸ் மற்றும் ஸ்ரீ லங்கா இன்ஸ்ீவரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் பிரதம செயற்பாட்டு அதிகாரி பிரியந்த பெரேரா ஆகியோரிடையே உத்தியோகபூர்வ காப்புறுதி அனுசரணைக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை பரிமாறப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், கூட்டாண்மை வணிகம் மற்றும் சந்தைப்படுத்தல் உதவி பொது முகாமையாளர் மஹேஷ் கமகே, உதவிச் சேவைகள் பிரதி பொது முகாமையாளர் சமிந்த குணசிங்க மற்றும் விநியோக தலைமை பிரதி பொது முகாமையாளர் லலித் டி சில்வா ஆகியோர் ஸ்ரீ லங்கா இன்ஸ்ீவரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் சார்பாக கலந்து கொண்டனர். MCA சார்பாக பொதுச் செயலாளர் ரொஹான் சோமவன்ச மற்றும் அனுசரணைக் குழுவின் தவிசாளர் ஹசித தசநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

MCA உடனான இந்த பங்காண்மையினூடாக, அதன் அங்கத்தவர்களுக்கு மோட்டார் காப்புறுதி பக்கேஜ்களை வழங்குவதாக அமைந்திருப்பதுடன், முக்கியத்துவம் வாய்ந்த கைகோர்ப்பாகவும் அமைந்துள்ளது.

ஒரு வருட காலத்துக்காக புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், பிரத்தியேகமான அனுகூலங்கள் மற்றும் விலைக்கழிவுகள் போன்ற பல சலுகைகளை வழங்குவதாக அமைந்திருக்கும்.




# பிரசவமான குழந்தைகளுக்கு பரிசுகள்

மக்கள் வங்கி, 76 ஆவது சுதந்திர தினத்தை மிகவும் எளிமையான வைபவத்துடன் தனது தலைமை அலுவலகத்தில் கொண்டாடியுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து நாடளாவியரீதியில் பல தொடர் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

ஆண்டுதோறும் சுதந்திர தினத்தன்று ஆரம்பிக்கப்படுகின்ற மக்கள் வங்கியின் "சுதந்திரத்தின் உதயம்" என்ற நிகழ்ச்சித்திட்டமானது இந்த ஆண்டிலும் முன்னெடுக்கப்பட்டது. இந்த கோட்பாட்டின் கீழ், பெப்ரவரி 1 ஆம் திகதிக்கும் 14 ஆம் திகதிக்கும் இடையில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் ரூபா 2,000ஃ- பெறுமதியான "இசுரு உதான" பரிசுச் சான்றிதழை மக்கள் வங்கி அன்பளித்து வருகின்றது.

தேசத்தின் பெருமை உணர்வை ஊக்குவித்து, தமது பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பெற்றோரை ஊக்குவிக்கும் நோக்குடன், 2006 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டத்தை மக்கள் வங்கி ஆரம்பித்திருந்தது.

குழந்தையின் பிறப்புச் சான்றிதழுடன், இப்பரிசுச் சான்றிதழை உபயோகித்து மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் "இசுரு உதான" சிறுவர் சேமிப்புக் கணக்கினை ஆரம்பிக்க முடியும்.

மக்கள் வங்கியின் ஊழியர்கள் வைத்தியசாலைக்கு நேரடியாக வருகை தந்து புதிதாக பிறந்துள்ள குழந்தைகளுக்கு சான்றிதழ்களை பரிசாக வழங்குவது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

காசல் வீதி மகளிர் வைத்தியசாலை மற்றும் பொரளை டி சொய்சா வைத்தியசாலை ஆகியவற்றுக்கு நேரடியாக விஜயம் செய்த மக்கள் வங்கித் தலைவர் சுஜீவ ராஜபக்ச அவர்கள் இதன் அடையாளமாக "இசுரு உதான" பரிசுச் சான்றிதழ்களையும் ஏனைய பரிசுகளையும் வழங்கி வைத்தார்.

# புதிய சாம்பிராணி வகை அறிமுகம்




40 வருட கால வரலாற்றைக் கொண்ட சன் மெட்ச் நிறுவனத்தின் வர்த்தக நாமமான சூரியா, தனது புதிய தயாரிப்பான சூரியா சாம்பிராணியை அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

வளியை தூய்மைப்படுத்துவதற்காக, எதிர்மறை சக்தியை அகற்றுவதற்கும் நலனை மேம்படுத்துவதற்கும் மருத்துவ குணநலன்கள் நிறைந்த துகள்களை எறிக்கும் பாரம்பரியத்தை தொடரும் வகையில் இந்த தயாரிப்பை அறிமுகம் செய்துள்ளது.

இந்த அறிமுக நிகழ்வு அண்மையில் கிராண்ட் கண்டியன் ஹோட்டலில் வெகு விமரிசையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிறுவனத்தின் சிரேஷ்ட பிரதிநிதிகள், வர்த்தக நாம தூதுவரான சின்னத்திரை நட்சத்திரம் யசோதா விமலதர்ம ஆகியோர் இந்நிகழ்வில் பிரசன்னமாகியிருந்ததுடன், சூரியா விநியோகத்தர்களுடன் தொடர்புகளை பேணியிருந்தனர்.

சன் மெட்ச் நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரியுமான கௌரி ராஜன் கருத்துத் தெரிவிக்கையில், "40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கையை வென்ற நாமம் எனும் வகையில், நவீன கால குடும்பத்தாருக்கும் இந்த பாரம்பரிய நலன்பேணும் செயன்முறையை இலகுவாக தொடர்வதற்கு நாம் விரும்பியதுடன், புதிய வாடிக்கையாளர்களுக்கும் அறிமுகம் செய்ய எதிர்பார்த்தோம். என்றார்.

# பிளாஸ்டிக் பாவனையிலிருந்து சூழலைக் காக்கும் இலங்கை வங்கி!



நாட்டின் பொறுப்புமிக்க பெருநிறுவனம் என்ற வகையில் இலங்கை வங்கி நாட்டின் சுற்றுச்சூழலையும்

உயிர்ப் பல்வகைமையையும் காக்கும் பொருட்டு கடற் சூழற் பாதுகாப்பு அதிகார சபையுடன்

இணைந்து "எங்கள் கடற்கரைகளுக்கு உயிர் கொடுப்போம்" என்ற திட்டத்தில் கைகோர்க்கிறது.

"இலங்கை உயிர்ப் பல்வகைமை" அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர் என்ற வகையில் இலங்கை வங்கி

பல அனுசரணைத் திட்டங்கள் மூலம் இயற்கையையும் அதன் உயிர்ப் பல்வகைமையையும் பாதுகாக்கும்

திட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில் "எங்கள் கடற்கரைகளுக்கு உயிர் கொடுப்போம்" என்கின்ற திட்டமும் கடற்கரை ஒன்றைத் தெரிவு செய்து அங்குள்ள பிளாஸ்டிக் முதலான சூழலுக்கு ஒவ்வாத பொருட்களை ஒரே நேரத்தில் அகற்றிச் சுத்தம் செய்யும் திட்டமாகும்.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் ரசல் பொன்சேகா, "சுற்றுச் சுழல் மற்றும் கடற் சுழற் பாதுகாப்பு என்பது உலகம் முழுவதும் ஒரு முக்கிய தலைப்பாக மாறியுள்ளது.

ஏனெனில் சூழல் மாசடைதல் முன்பை விட உலகெங்கிலும் உள்ள மனிதகுலத்திற்கு கடுமையான அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

ஆகையால் தமது அப்பழுக்கற்ற அர்ப்பணிப்பு மூலம் இந்த அச்சுறுத்தலில் இருந்து சழலைப் பாதுகாத்துக் கொள்ள முன்னோடியாகச் செயற்பட வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது என்றார்.

# கழிவு சேகரிப்பில் புது கண்டுபிடிப்பு




இலங்கையின் தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் பிரச்சினைகளில் ஒன்றான தவறாக நிர்வகிக்கப்படும் கழிவுகளுக்கு ஒரு தீர்வை கண்டறிந்தார் மஞ்சுளா ராமலிங்கம்.

உள்நாட்டில் தேங்கி நிற்கும் கழிவுகளின் எடையால் இலங்கை போராடுகிறது – தினமும் 9,000 மெட்ரிக் தொன் திடக்கழிவு உற்பத்தி செய்யப்படுகிறது, இது ஒவ்வொரு ஆண்டும் 1.2% அதிகரித்து வருகிறது.

கழிவு நிர்வகிப்பு இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியில், மஞ்சுளா ASPIRE திட்டத்தில் ஒரு உயிர்நாடியைக் கண்டுபிடித்தார், அப்போது அவரது மைத்துனர் அதை அவருக்கு பரிந்துரைத்தார்.

Coca-Cola அறக்கட்டளையின் நிதியுதவியுடன் வேர்ல்ட் விஷன் லங்காவின் கூட்டு முயற்சியான ASPIRE, கழிவு நிர்வகிப்பின் அவசரப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றது.

இந்த திட்டம் பிளாஸ்டிக் சேகரிப்பை மட்டும் அல்லாமல் பிளாஸ்டிக் சேகரிப்பை வலுப்படுத்தவும், மீள்சுழற்சி முயற்சிகளை மேம்படுத்தவும், பொறுப்பான PET பிளாஸ்டிக் அகற்றலுக்கு வாதிடவும், கழிவு நிர்வகிப்பு அமைப்பில் முக்கிய பங்கு வகிப்பவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் நோக்கமாக உள்ளது.

கற்றுக்கொள்வதற்கு ஆர்வமாக இருந்த மஞ்சுளாவின் முதல் பயிற்சிப் பட்டறைக்குப் பிறகு ASPIRE இல் சேருவதற்கான முடிவு வலுப்பெற்றது.

மேலும் பங்களிக்கும் ஆர்வத்தில், அவர் ஒரு செயலில் பங்கேற்பாளராக ஆனார், அதிகாரமளித்தல் மற்றும் வளர்ச்சியின் உணர்வை வெளிப்படுத்தும் ASPIRE நோக்கத்தை உருவாக்கினார்.

# DFCC Remittances முதல்தர தெரிவு

வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் தங்குதடையின்றி, பாதுகாப்பாக, விரைவாக மற்றும் கட்டுபடியான கட்டணங்களுடன் இலங்கைக்கு பணத்தை அனுப்புவதற்கான சேவையை னுகுஊஊ சுநஅவைவயஉநள தீர்வு தொடர்ந்தும் சிறப்பாக வழங்கி வருகின்றது.

சர்வதேச நாடுகளிலுள்ள இலங்கைச் சமூகத்தினர், இலங்கையிலுள்ள தமது அன்பிற்குரியவர்களுக்கு சிரமமின்றி பணத்தை அனுப்பி வைப்பதற்கு இடமளிக்கும் வகையில் அவர்களுக்கு சௌகரியமான நிதித் தீர்வுகளை வழங்குவதில் னுகுஊஊ வங்கியின் அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கின்றது.

11 கூட்டாளர்கள் வங்கிகளுடன் இணைந்து செயல்பட்டு, உள்நாட்டு வங்கிக் கணக்குகளுக்கு நிகழ்நேரத்தில் விரைவாகவும், பாதுகாப்பாகவும் பணத்தை நேரடியாக அனுப்புவதை னுகுஊஊ சுநஅவைவயஉநள உறுதி செய்கின்றது.

தற்போது சர்வதேசம் எங்கிலும் நன்மதிப்புடைய பணப்பரிமாற்ற நிறுவனங்களின் கூட்டாண்மை மூலமாக தனது சேவைகளை மேலும் பல நாடுகளுக்கும், இடங்களுக்கும் னுகுஊஊ சுநஅவைவயஉநள விஸ்தரித்து வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில், பணத்தைப் பெற்றுக்கொள்பவர்கள் டிஜிட்டல்ரீதியாகவும், நேரடியாகவும் அல்லது தமது டெபிட் அட்டைகளை உபயோகித்து அவற்றை சௌகரியமாகப் பெற்றுக்கொள்ள ஏதுவாக நிகரற்ற




வகையில் டுயமெயீயல ஏடிஎம் மையங்களினூடாக பெற்றுக்கொள்ளும் வகையில் நாடெங்கிலும் பல்வேறு இடங்களில் தனது உள்நாட்டுப் பிரசன்னத்தின் அனுகூலத்தைச் சிறப்பாக உபயோகித்து வருகின்றது.